2012 மார்ச் 29]

வைத்துக்கொள்ள சட்டப்படி அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அம்மா அவர்களுடைய கடந்த ஆட்சிக் காலத்திலே வெளியிடப்பட்ட அரசாணை எண் 274, நாள் 8-9-2004-ன்படி நான்காண்டுகளுக்கு ஒரு முறை ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்படும் என்று கொண்டுவரப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு 7- 11-2008- ல் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டது. எனவே, அவர்களுக்கு அடுத்த குறைந்தபட்ச ஊதியம் அடுத்த நான்காவது ஆண்டு முடிந்து 7-11-2012-ல் செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். பஞ்சாலைகளில் உள்ள தொழிற்பழகுநர்களின் பயிற்சிக் காலமான மூன்று வருடம் என்பதை ஆறு மாதமாகக் குறைத்து நிலையாணைகள் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வருவதற்கான சட்டமுன்வடிவு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு, ஜனாதிபதியினுடைய கையெழுத்திற்காக வைக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**19—**

**தரம் உயர்த்துதல்**

***7085—திரு. வி.எஸ். இராஜி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யூர் தொகுதி, பவுஞ்சூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், சைதாப்பேட்டை சுகாதார மாவட்டம், லத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பவுஞ்சூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணைப்படி, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்தப்பட்டு அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள்.

**திரு. வி.எஸ். இராஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “சிரிக்கும் ஏழை முகம் காண வேண்டும், அவர் சிந்தும் கண்ணீர் நிலை மாற வேண்டும்” என்ற வாக்கிற்கிணங்க இன்றையதினம் பெண் உரிமையைப் போற்றிப் பாதுகாக்கும் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் சரித்திரம் படைத்துக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காப்பிய நாயகி மணிமேகலை, தன் கையிலிருந்த அள்ள, அள்ளக் குறையாத ‘அமுதசுரபி’ என்ற அட்சயப் பாத்திரத்தின்மூலம் ஏழையெளிய மக்களின் பசிப் பிணியைப் போக்கினார் என்ற காப்பியத்தை நாங்கள் படித்திருக்கின்றோம். ஆனால், இன்று ஏழையெளிய மக்களின் உடற்பிணியைப் போக்குகின்ற வகையிலே, மாண்புமிகு முதலமைச்சரின் விரிவாக்கப்பட்ட புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் நவீன யுகத்தின் மணிமேகலையாய் திகழ்ந்துக்கொண்டிருக்கின்ற, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை இந்த நல்ல நேரத்திலே வணங்குகிறேன்.

இந்தச் சேயின் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்து எனது செய்யூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பவுஞ்சூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்தித் தந்து, இந்தத் தொகுதிக்கு நல்ல பணி செய்துகொண்டிருக்கின்ற அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாகவும் என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.